திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வரின்(முகூபொ) செயல்முறைகள்

முன்னிலை: திருமதி. சு. இந்திராணி, எம்.எஸ்ஸி, எம்.பில்.,

ந.க.எண். **519/ஆ/2019** நாள்: **18.03.2020**

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை- தமிழ்நாடு அமைச்சுப் பணி- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தொகுதி IV- 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018- ஆண்டுக்கான தெரிவு- நேரடி நியமனம் - செல்வி. இரா. மாரீஸ்வரி என்பவர் தட்டச்சராகப் பணியில் சேர்ந்தது- பணிவரன்முறை செய்வது தொடர்பாக

பார்வை: 1)சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். **7882/பி1/2019** நாள்:**28.02.2019** (தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடிதம்.எண்.**1707/PSD-A/2019** நாள்:**20.02.2019**)
2)திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள் ந.க.எண். **519/ஆ/2019** நாள்: **06.03.2019**
3)திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வரின் கடிதம் ந.க.எண். **519/ஆ/2019** நாள்:**15.03.2019**
4)சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். **7882/பி1/2019** நாள்:**10.03.2020**

-- -- --

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015-2016, 2016-2017. 2017-2018ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி-IV தேர்வில் தெரிவு செய்யப்பட்டு தட்டச்சராகப் பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 1-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறையின்படி இக்கல்லூரிக்கு பணிநியமன ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 2-ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமன ஆணை வழங்கப்பட்டதையடுத்து செல்வி. இரா. மாரீஸ்வரி என்பவர் இக்கல்லூரியில் தட்டச்சராக **15.03.2019** முற்பகல் பணியில் சேர்ந்தார், தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தற்பொழுது பார்வை 4-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியவாறு (வரிசை எண் 67) செல்வி. இரா. மாரீஸ்வரி என்பவர் தட்டச்சராக பணியில் சேர்ந்த **15.03.2019** முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் "இப்பணிவரன்முறை தொகுதி-IV (2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018) பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது" என்ற நிபந்தனையின் அடிப்படையில் இவ்வாணை வழங்கப்படுகிறது.

சு. இந்திராணி 18/3/2020

முதல்வர் (முகூபொ)
எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி,
திருப்பூர்

18/03/2020

பெறுநர்:செல்வி. இரா. மாரீஸ்வரி, தட்டச்சர்,
எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர்

நகல்:கல்லூரிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.